## தகவலுக்கான உரிமை, சட்டமாக்கப்பட்டமை தொடர்பான சர்வதேச வரலாறு

**பின்னணி**

தகவலுக்கான உரிமை, தகவலுக்கான சுதந்திரம் மற்றும் தகவலுக்கான அணுக்கம் ஆகியன பெரும்பாலும் ஒன்றுக்கொன்று சமமான ஆனால் மாறுபட்ட மூவகையான வெவ்வேறு கோட்பாடுகள் ஆகும்.

தகவலுக்கான உரிமை தொடர்பான வரலாறு பற்றிக் கலந்துரையாடும் போது இம் மூவகையான கோட்பாடுகளும் ஒரேவிதமானவை எனக் கருதப்பட்டுக் கலந்துரையாடப்படுகிறது.

''மக்கள் வசமுள்ள தகவலுக்கான உரிமையானது அரசினால் ஏற்றுக்கொள்ளப்படல் தொடர்பான வரலாறு'' போன்றே ''தகவலுக்கான உரிமை தொடர்பான சட்டம் அங்கீகரிக்கப்பட்டமை பற்றிய வரலாறு''ம் ஒன்றுக்கொன்று முரண்பட்டதாகும்.

தகவலுக்கான உரிமையை ஒரு மனித உரிமையாக ஏற்றுக்கொள்ளல் மற்றும் தகவலுக்கான உரிமைச் சட்டத்தை வகுத்தல் ஆகியன ஒன்றுக்கொன்று மாறுபட்டதாகும்.

தகவலுக்கான உரிமை தொடர்பான வரலாறு பற்றிய விடயத்தினைக் கற்கின்ற போது இவ் அனைத்து விடயங்கள் பற்றியும் கலந்துரையாடப்படல் வேண்டும்.

**<u>மக்களின் தகவலுக்கான உரிமையை ஏற்றுக்கொள்ளல்</u>**

மக்களின் தகவலுக்கான உரிமை, அரசினால் ஏற்றுக்கொள்ளப்படல் தொடர்பான முதலாவது சாட்சி கி.மு. மூன்றாம் நூற்றாண்டு வரையான நீண்டதொரு வரலாற்றைக் கொண்டுள்ளது. அது இந்தியாவை ஆண்ட அசோக சக்கரவர்த்தியின் ஆட்சிக் காலத்தில் ஆகும். அசோக சக்கரவர்த்தி தனது அரசாட்சிக்காகப் பயன்படுத்திய சட்டதிட்டங்கள் மற்றும் மக்களுக்குத் தேவையான அரச தகவல்கள்களை தூன் கல்வெட்டுக்களில் எழுதி வைத்து தனது நாட்டின் முக்கிய இடங்களில் காட்சிப்படுத்தினார். அரச தகவல்கள் அடங்கிய இந்த தூன் கல்வெட்டுக்களே தொல்பொருள் விஞ்ஞானிகளினால் அசோக தூன்கள் எனக் கருதப்படுகிறது. இத் தூன்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களை வாசிக்க முடியாத மக்களுக்கு இத்தகவல்கள் பற்றி விளக்கமளிப்பதற்காக அரச அதிகாரிகள் இத்தூன்களுக்கு அருகாமையில் நிறுத்தப்பட்டிருந்தார்களௌ வரலாறு குறிப்பிடுகிறது. ஆகவே தகவல் தொடர்பான வரலாறு மேற்கத்திய நாடுகளிலிருந்து அல்லாமல் கீழேத்தேய நாடுகளிலிருந்தே ஆரம்பிக்கப்பட்டது எனலாம்.

**<u>தகவலுக்கான உரிமைச் சட்டம் வகுக்கப்படல்</u>**

சுவீடன் பாராளுமன்றத்தில் பத்திரிகைகளில் எழுதுவதற்கான சுதந்திரம் தொடர்பான சட்டம் (The Ordinance on freedom of Writing and of the Press) அங்கீகரிக்கப்பட்டமையே மக்களுக்குச் சொந்தமான தகவலுக்கான உரிமையானது சட்டமாக்கப்பட்ட முதலாவது சந்தர்ப்பமாகக் கருதப்படுகிறது. இச்சட்டமானது மதப் போதகரும் சுவீடன் நாட்டின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருமான எண்டர்ஸ் (Anders Chydenius) சைடெனிஸ் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது. அன்று சுவீடன் நாட்டில் பாராளுமன்ற ஆட்சி முறை மற்றும் மன்னர் ஆட்சி முறை ஆகியன காணப்பட்டதுடன் **<u>எடொல் பெடரிக்</u>** ஆட்சிக் காலத்தின் போதே இச்சட்டமானது பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. பத்திரிகைச் சுதந்திரத்தைப் பாதுகாப்பது இச்சட்டத்தின் குறிக்கோளாகக் காணப்பட்ட போதும் இச்சட்டத்தின் உள்ளடக்கத்திற்கு அமைய தகவல் அறியும் சுதந்திரம் தொடர்பான உலகின் முதலாவது சட்டமாக இது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

தகவலுக்கான உரிமை தொடர்பான உலகின் இரண்டாவது சட்டமாகக் கருதப்படுவது பின்லாந்து அரசினால் அங்கீகரிக்கப்பட்ட அரசாங்கத்தின் செயற்பாடுகளின் வெளிப்படைத் தன்மை தொடர்பான சட்டம் (Act on the Openness of Government Activities) ஆகும். இது 1951 ஆம் ஆண்டு சட்டமாக்கப்பட்டது.

தகவலுக்கான உரிமையை அங்கீகரித்த உலகின் மூன்றாவது நாடாக ஐக்கிய அமெரிக்கா விளங்குகிறது. 1966 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்ட தகவலுக்கான சுதந்திரச் சட்டமே அதுவாகும்.

அதனைத் தொடர்ந்து 1970 ஆம் ஆண்டு நோர்வே மற்றும் டென்மார்க் ஆகிய நாடுகளில் தகவலுக்கான உரிமைச் சட்டம் அங்கீகரிக்கப்பட்டதுடன் 1978 ஆம் ஆண்டு நெதர்லாந்து தகவல் சட்டத்தை அங்கீகரித்தது.

1980 ஆம் தசாப்தம் வரையில் மிகச் சிறிய அளவிலேயே உலகில் தகவல் சட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டடிதென்பது இதன் மூலம் தெளிவாகிறது.

1990 மற்றும் 2000 ஆம் தசாப்ப காலங்களிலேயே தகவல் உரிமை தொடர்பாக உலகில் பாரியளவு மறுமலர்ச்சி ஏற்பட்டது. ஆயினும் 2000 ஆம் ஆண்டுக்குப் பின்னரே தெற்காசியாவில் தகவல் உரிமை தொடர்பான சட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டன.

இதுவரை உலகின் 117[1] நாடுகளில் தகவலுக்கான உரிமைச் சட்டம் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் மேலும் 44 நாடுகளில் தகவலுக்கான உரிமைச் சட்டத்தை அங்கீகரிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது[2].

அவ்வாறே உலக சனத்தொகையில் 86% வீதத்தினர் தகவலுக்கான உரிமை, சட்ட ரீதியாக உறுதி செய்யப்பட்டுள்ள நாடுகளில் வாழ்கின்றனர்[1].

**<u>தெற்காசியாவில் தகவலுக்கான உரிமைச் சட்டங்கள் அங்கீகரிக்கப்படல்</u>**

2000 ஆம் ஆண்டுக்குப் பின்னரே சார்க் பிராந்திய நாடுகளில் தகவலுக்கான உரிமைச் சட்டங்கள் அங்கீகரிக்கப்படத் துவங்கியது. அதற்கமைய பின்வருமாறு அவை அங்கீகரிக்கப்பட்டன.

- பாகிஸ்தானில் 2002 ஆம் ஆண்டு தகவலுக்கான சுதந்திரம் தொடர்பான கட்டளைச் சட்டம் ( Freedom of Information Ordinance) அங்கீகரிக்கப்பட்டது.
- இந்தியாவில் 2005ஆம் ஆண்டு இந்திய மத்திய அரசினால் தகவலுக்கான உரிமைச் சட்டம் அங்கீகரிக்கப்பட்டது. (ஒருசில மாநிலங்களில் முற்கூட்டியே தகவலுக்கான சட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டன)
- நேபாளத்தில் 2007 ஆம் ஆண்டு தகவலுக்கான உரிமைச் சட்டம் அங்கீகரிக்கப்பட்டது.
- பங்களாதேஷில் 2009 ஆம் ஆண்டு தகவலுக்கான உரிமைச் சட்டம் அங்கீகரிக்கப்பட்டது.
- மாலைத்தீவில் 2014ஆம் ஆண்டு தகவலுக்கான உரிமைச் சட்டம் அங்கீகரிக்கப்பட்டது.
- ஆப்கானிஸ்தானில் 2014ஆம் ஆண்டு தகவலுக்கு அணுகுவதற்கான சட்டம் (ACCESS TO INFORMATION LAW) அங்கீகரிக்கப்பட்டது.
- இலங்கையில் 2016 ஆம் ஆண்டு தகவலுக்கான உரிமைச் சட்டம் அங்கீகரிக்கப்பட்டது.
- பூட்டானில் இதுவரையில் தகவலுக்கான உரிமையானது சட்டமாக்கப்படவில்லை. ஆயினும் 2014 ஆம் ஆண்டு சட்டமூலமொன்று முதலாவது மந்திரி சபையில் (National

Assembly) அங்கீகரிக்கப்பட்ட போதும் உத்தர மந்திரி சபையினால் (Upper House) குறித்த சட்டமூலம் நிராகரிக்கப்பட்டது[1].

**இந்தியாவில் தகவலுக்கான உரிமையானது சட்டமாக்கப்படல்**

இந்தியாவில் தகவலுக்கான உரிமை தொடர்பான கலந்துரையாடலுக்கு நீண்டதொரு வரலாறு உள்ளது. தகவலுக்கான உரிமையானது சட்டமாக்கப்படல் தொடர்பான இந்தியாவின் வரலாறானது 1977 ஆம் ஆண்டு மக்களின் தகவலுக்கான உரிமையினை உறுதிசெய்யும் முகமாக பிரதமர் மொராஜ் தேசாய் அவர்களினால் அரச உத்தியோகபூர்வ இரகசியச் சட்டத்தை திருத்துவதற்கான குழுவொன்று நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஆரம்பமாகியது. பின்னர் இந்திய உச்ச நீதிமன்றம் 1986 ஆம் ஆண்டு **கல்வால் எதிர் ஜெய்ப்பூர் மாநகர சபைக் கூட்டுத்தாபனம்** என்ற வழக்கில் இந்தியாவின் அரசியலமைப்பின் 19 ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்ட பேச்சு மற்றும் கருத்து தெரிவிக்கும் உரிமையினுள் தகவல் அறிவதற்கான உரிமையும் உள்ளடங்குவதாக தெரிவித்தது. 1990 ஆம் ஆண்டு பிரதமர் வீ.பீ.சிங் அவர்களின் தேசிய முன்னணி அரசாங்கம் தகவலுக்கான உரிமைச் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு முயற்சித்த போதும் அப்போது நிலவிய உறுதியற்ற அரசியல் சூழ்நிலை காரணமாக அதனை யதார்த்தமாக்க முடியவில்லை.

தகவலுக்கான உரிமையினைச் சட்டமாக்குவதற்கான சிவில் இயக்கங்களின் அமைப்பு ரீதியான செயற்பாடு 1994 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அது ராஜஸ்தான் மாநிலத்தை மையமகக் கொண்டு உருவான 'மந்தூர் கிஷன் சக்தி சங்கதன்' (MKKS) எனும் இயக்கம் ஆகும். திருமதி அருணா ரோய் அதற்கு தலைமை தாங்கினார். 1994 ஆம் ஆண்டு 'மந்தூர் கிஷன் சக்தி சங்கதன்' (MKKS) இயக்கத்தினால் தகவல் சட்டமூலமொன்று தயாரிக்கப்பட்டது. 1996 ஆம் ஆண்டு அனைத்து சிவில் செயற்பாட்டாளர்களும் ஒன்றிணைந்து "மக்களின் தகவல் உரிமைக்கான தேசிய இயக்கம் (National Cmpaign for People's Right to Information-NCPRI)" உருவாக்கப்பட்டது. அதே ஆண்டில் இந்திய பத்திரிகைச் சபையானது அதன் தலைவரான உச்சநீதிமன்ற நீதியரசர் பீ.எஸ்.சவாந்தி அவர்களின் வழிகாட்டலின் கீழ் தகவல் சுதந்திரம் தொடர்பான சட்டமூலமொன்றை தயாரித்தது.

1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில அரசின் அரசியலமைப்பு சபையினால் தகவலுக்கான உரிமைச் சட்டம் அங்கீகரிக்கப்பட்டதுடன் அது இந்தியாவின் மாநில அரசாங்கம் ஒன்றினால் அங்கீகரிக்கப்பட்ட முதலாவது தகவல் சட்டமாக அமைந்தது. அதே ஆண்டு கோவா மாநிலமும் தகவலுக்கான உரிமைச் சட்டத்தினை அங்கீகரித்தது. மத்திய பிரதேஷ் அரசும் நிறைவேற்றுக் கட்டளை ஒன்றை வழங்கி தனக்கு கீழ் செயற்படும் 36 திணைக்களங்களின் தகவல்களை பொதுமக்கள் பெற்றுக்கொள்வதற்கான பாதையினை திறந்துவிட்டது. பிராந்திய ரீதியில் இந்த நடவடிக்கைகள் இடம்பெற்ற நிலையில் அதே ஆண்டு மத்திய அரசாங்கமானது தகவலுக்கான உரிமைச் சட்டமூலமொன்றை வகுப்பதற்கான குழுவொன்றை நியமித்தது.

1999 ஆம் ஆண்டு தகவலுக்கான உரிமைச் சட்டமொன்றைக் கொண்டு வருமாறு அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்து பொதுமக்கள் நலன் காக்கும் வழக்கொன்று இந்திய உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

இறுதியாக 2005 ஆம் ஆண்டு மே மாதம் 11 ஆம் திகதி லோக் சபையிலும் மே மாதம் 12 ஆம் திகதி அரச சபையிலும் இந்தியாவின் தகவல் சட்டம் அங்கீகரிக்கப்பட்டது.[1]

**தகவல் உரிமையை உறுதிசெய்த சர்வதேச ஆவணங்கள்**

[1] http://rtiact2005.com/history-of-rti-act-2005-in-india-evolution-and-challenges/

தகவல் உரிமையானது பிரசைகளின் உரிமை போன்றே மனித உரிமையும் ஆகும். ஆகவே ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் மற்றும் ஏனைய சர்வதேச நிறுவனங்கள் ஊடாக வெளியிடப்பட்ட மனித உரிமை ஆவணங்களிலும் தகவலுக்கான உரிமை உறுதிசெய்யப்பட்டுள்ளது. முதற்தர மனித உரிமை ஆவணங்களில் தகவலுக்கான உரிமை உறுதிசெய்யப்பட்டுள்ள விதத்தினை கீழ் குறிப்பிடப்பட்டவாறு கலந்துரையாட முடியும்.

**<u>மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச பிரகடனம்-1948</u>**

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் 1948 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் அங்கீகரித்த ஐக்கிய நாடுகளின் சர்வதேச பிரகடனத்தின் 19 ஆவது உறுப்புரையில் தகவலுக்கான உரிமை தொடர்பாக பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

*''கருத்துச் சுதந்திரம் மற்றும் கருத்து தெரிவித்தல் ஆகியன தொடர்பாக ஒவ்வொரு பிரசைக்கும் உரிமை உண்டு. மற்றவர்கள் தடை விதிக்காதவாறு தனது கருத்தைக் கொண்டிருப்பதற்கும் தேச எல்லையினைக் கருதாது எந்தவொரு ஊடகத்தினூடாகவும் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கும் வழங்குவதற்குமான உரிமை இதில் உள்ளடங்கும்''*

**<u>சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான ஒப்பந்தம்-1966</u>**

ஐக்கிய நாடுகளின் பெதுச்சபையினால் 1996ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்ட சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச ஒப்பந்தத்தின் 19 ஆம் உறுப்புரையில் அங்கத்துவ நாடுகளின் பிரசைகளுக்குரிய தகவலுக்கான உரிமை பற்றி கீழ்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

*''1. தங்குதடையின்றி தனது கருத்தைக் கொண்டிருக்கும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு. 2.கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரம் அனைவருக்கும் உண்டு. தேச எல்கைளைகளைக் கருதாது தகவல்களை வாய்மொழி மூலம், எழுத்து மூலம் அல்லது அச்சுப் பதிப்பு மூலம், ஓவியங்கள் மூலம் இன்றேல் தான் விரும்பும் வேறு எந்தவொரு ஊடகம் மூலம் தேடுவதற்கு, பெற்றுக்கொள்வதற்கு மற்றும் அறிவிப்பதற்கான சுதந்திரம் இவ் உரிமையில் உள்ளடங்குதல் வேண்டும்.*

*இப் பரிவின் 2 ஆம் பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள உரிமைகளை நடைமுறைப்படுத்தலானது விசேட கடமைகள், பொறுப்புக்களுடன் தொடர்புபட்டுள்ளது. ஆகவே அது ஒருசில வரையறைகளுக்கு உட்பட முடியுமான போதும் அந்த வரையறைகள்:*

*(அ) ஏனையவர்களின் உரிமைகளுக்கும் நன்மதிப்பிற்கும் மதிப்பளிக்கும் வகையிலும், (ஆ) தேசிய பாதுகாப்பு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அல்லது பொதுச் சுகாதாரம் மற்றும் பன்பாட்டினைப் பாதுகாக்கும் வகையிலும் சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதும் அவ்வாறு தேவைப்படுத்தப்பட்டவையாக இருத்தல் வேண்டும்.''*

ஆகவே தகவலுக்கான உரிமையினை அனுபவிக்கும் போது அது ஒருசில வரையறைகளுக்கு உட்பட்டு அனுபவிக்கப்படல் வேண்டுமென்பது தெளிவாகிறது.

**<u>முடிவுரை-</u>**
ஆகவே தகவல் சட்டத்திற்கு நீண்டதொரு வரலாறு உள்ளதென்பதும் தெற்காசியாவில் இதற்கான சட்டங்கள் 2000ஆம் ஆண்டுக்குப் பின்னரே அங்கீகரிக்கப்பட்டதென்பதும் தெளிவாகிறது. எவ்வாறாயினும் உலகில் தகவல் சட்டத்தை உறுதிசெய்த 111ஆவது நாடாக எமது நாடு விளங்குகிறது.

**சட்டத்தரணி ஜகத் லியன ஆரச்சி**

***தமிழாக்கம் நிசாம் எம் யாசீன்***